ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# ஸ்ரீநிவாஸர் திருமஞ்சனக் கட்டியம்

நாயந்தே! நாயந்தே!
ஜய விஜயீபவ!
தேவ தேவோத்தம, தேவ கம்பீர தேவதா ஸார்வபௌம!
பராக்! ஸ்வாமிந் பராக்!

லக்ஷ்மீ நேத்ரோத்பல ஸ்ரீஸதத பரிசயதேஷ ஸம்வர்த்தமாந!
நாபீநாளீ கரிங்கந மதுகரபடலீ தத்த ஹஸ்தாவலம்ப: |
அஸ்மாகம் ஸம்பதோஹா அவிரள துளஸீதாம ஸஞ்ஜாத பௌம காளிந்தீ
காந்தீஹாரி கலயது வபுஷக் காளிமா கைடபாரே!

கமப்யநவதிம் வந்தே கருணா வருணாலயம்
வ்ருஷஷைலதடஸ்தாநாம் ஸ்வயம் வ்யக்திமுபாகதம் |

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால் வேங்கடமே
தானவரை வீழத் தன் ஆழிப்படை தொட்டு வானவரை காப்பான் மலை |

அண்ணல் மாயன் அணிகொள் செந்தாமரைக் கண்ணன் செங்கனிவாய்க்
கருமாணிக்கம் தெண்ணிறைச் சுனைநீர்த் திருவேங்கடத்து எண்ணில்
தொல்புகழ் வானவர் ஈசனே!
ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று நான்முகன்
தன்னொடு தேவர் உலகொடு உயிர் படைத்த பெருமாள்!
மண்ணும் நீரும் எரியுநல் வாயுவும் விண்ணுமாய் நின்ற எம்பெருமான்!
நீராய் நிலனாய்த் தீயாய் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்கள்
இரண்டாய் சிவனாய் அயனாய் நின்ற எம்பெருமான்!
மாயா! வாமனனே! மதுசூதா! நீ அருளாய்!
தீயாய் நீராய் நிலனாய் விசும்பாய் காலாய் தாயாய் தந்தையாய்
மக்களாய் மற்றுமாய் முற்றுமாய் நின்ற எம்பெருமான்!

முனிவன் மூர்த்தி மூவராகி வேதம் விரித்துரைத்த புனிதன், பூவை
வண்ணன் அண்ணல், புண்ணியன் விண்ணவர்கோன், தனியன் சேயன்,
தான் ஒருவனாகிலும் தன் அடியார்க்கினியன், எந்தை எம்பெருமான்!
கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள் தானும்
மற்றை நிலமகளும் வானவர் பிறர்க்கும் நீர்மையினால் அருள் செய்து
நீண்ட மலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கமும்
தங்குகின்ற எம்பெருமான்!

கூடியாடி உரைத்ததே உரைத்தாய் என் நெஞ்சம் என்பாய் துணிந்து
கேள் பாடியாடிப் பலரும் பணிந்தேத்தி காண்கிலார் ஆடுதாமரையோனும்
ஈசனும் அமரர்கோனும் நின்றேத்தும் வேங்கடத்தாடு கூத்தனே!

எப்பொருட்கும் நின்றார்க்கும் எய்தாது நான்மறையின் சொற்பொருளாய்
நின்ற என் கற்பகமே!
உலகளந்த மாணிக்கமே! என் மரகதமே! மற்றொப்பாரில்லா
ஆணிப்பொன்னே!
மீனோடு ஆமை கேழல் அரி குறளாய் முன்னுமிராமானாய்த் தானாய்
பின்னுமிராமனாய்த் தாமோதரனாய் கற்கியாய் நின்ற என் கண்ணனே!
குன்றால் குளிர்மாரி தடுத்துகந்த எம் கோவே!
கானார் கரி கொம்பு அதொசித்த களிறே!
வேடார் திருவேங்கடம் மேய விளக்கே!
கல்லால் கடலை அணைகட்டி உகந்த எம் களிறே!
கோலால் நிரை மேய்த்த எம் கோவலர் கோவே!
பூவார் திருமாமகள் புல்கிய மார்பனே!
வராகமதாகி இம்மண்ணை இடந்த நாராயணனே!
கார்கலந்த மேனியனே! கைகலந்த ஆழியனே!
பார்கலந்த வல்வயிற்றோனே!
சீர்கலந்த சொல் நினைந்து போற்றும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனே!

நின் விழி சுத்தி வழியாட, விரகமழ் துளபமாட, திருவெரிபுறமாட,
திருமார்பு சதங்கையாட, கரிகண்ட தனியாட, வியர்புருவ நிழலாட,
படையாட, பாடையாட, ஒருபதம் அசைந்தாட, ஒருபதம்
இசைந்தாட, உள்ளே கனிந்து நெஞ்சே சிரித்து அடியவர்
கொண்டாட, பின்னாட, முன்னாட, நின் நடையழகை என்று
காண்பேனே!

சிவன் சதுமுகன் வேதாந்தாரியன் கண்டு களிக்கும் தேவனே!
பட்டர்களும் பழமொழிவாய் நால்வேத வாணர்களும் சித்தர்களும்
தொழுதிறைஞ்சும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனே!

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாமுறாமை உயிரளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே!

த்வம்மே அஹம்மே குதஸ்தத் ததபிகுத: இதம் வேதமூல ப்ரமாணாத்
ஏதச்சாநாதி ஸித்தா தநுபவவிபவாத் சோபி ஸக்ரோஷ ஏவ |
க்வாக்ரோஷ கஸ்யகீதாதிஷு மம விதித: கோத்ர ஸாக்ஷீ ஸுதீஸ்யாத்
ஹந்தத்வத் பக்ஷபாதீ ஸ இதி ந்ருகலஹேம்ருக்ய மத்யஸத்தவத்வம் ||

ஏலாஜாதி லவங்கமிளத் தத்கோல உத்தாநிஸா!
எப்போஸீர படீர ஸாரவிலஸத் கர்பூர காஷ்மீரவ்ருது!
ஸ்நாநீயம் தபநீய பாஜநவ்ருதம் தீர்த்தம் க்ருதார்த்தங்குரு!
ஸ்நாநார்ச்சி வ்ருஷஷைல நாத ஜநதா தாயத்ய தாவத்த்ரியாத்!

கௌசிகன் வேள்வியைக் காத்தளிக்க ஓடி வந்த வேர்வையாரவோ!
கூருசிலையால் தாடகையைக் கொன்றுகந்த களையாரவோ!
மண்மகளை மணம் புரிய மண்ணவர்கள் மனம் மறுக விண்ணவர்கள் விரும்பி நிற்க விண்மகளும் விடை கொடுப்ப வல்லேகன் வில் முறித்த விடாய் தீரவோ!
பரசுமுனிவன் பகை அனைத்தும் பறக்க சினம் கொண்ட ச்ரமம் தீரவோ!
மாய மதுகைடபரை மடித்திட்ட இளைப்பாரவோ!
ஒருகுறளாய் இருநிலம் மூவடி மண் வேண்டி உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும் தருக என மாவலியைச் சிறையில் வைத்த ச்ரமம் தீரவோ!
சலங்கொண்ட இரணியனது அகல்மார்வம் கீண்டு தடங்கடலைக் கடைந்து அமுதம் கொண்டுகந்த களையாரவோ!
உத்தமமமர்த்தலம் அமைத்தோரெழில் தனுவன் உய்த்த கணையால் அத்திரவரக்கன் முடி பத்தும் ஒரு கொத்தென உதிர்த்ததனால் உண்டான விடாய் தீரவோ!

தோளின் மேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடி மேலும் தாளிணை மேலும் குளிர்ந்த தண்ணந்துழாய் உடைய அம்மானான தேவரீர் திருமகள் மண்மகள் நீளா தேவி முதலா எல்லா தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்க, மாணிக்கம் கட்டி வைரமிடை கட்டி ஆணிப்பொன்னால் திருமஞ்சன வீதியிலே எழுந்தருளியிருந்து பக்திமான்கள் கண்டு களித்து பல்லாண்டு பாட, அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு, வன்பெரு வானகமுய்ய அமருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகமகிழும் தொண்டர் வாழ என் மணியே! மாணிக்கமே! என்னுடைய இன்னமுதே! அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பனே! மஞ்சனமாடி அருள்பவனே!

**ஸ்ரீநிவாஸாய மங்களம்**